தேதி:27.10.2014

தினமலர்
உண்மையின் உரைகல்

## மல்லிகை கிலோ ரூ.20 க்கு விற்பனை



திண்டுக்கல்:நிலக்கோட்டை பூ மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால், மல்லிகை பூ, ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்றது.

நிலக்கோட்டை, கொடைரோடு, உசிலம்பட்டி பகுதிகளில், சில நாட்களாக நல்ல மழை பெய்து வருவதால் மல்லிகை விளைச்சல் அதிகரித்து, நிலக்கோட்டை பூ மார்க்கெட்டிற்கு மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது. சீசன் முடிந்ததால் கடந்த வாரம் வரை அரை டன் மட்டுமே வரத்து இருந்தது. ஆனால், நேற்று மட்டும் 4 டன் வரை விற்பனைக்கு வந்தது. இதனால், விலை கடுமையாக சரிந்துள்ளது.

கடந்த வாரம் வரை கிலோ ரூ.150 க்கு விற்ற மல்லிகை, நேற்று 20 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால் விவசாயிகள், வியாபாரிகள் கவலை அடைந்தனர். திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் மல்லிகை கிலோ ரூ.50 க்கு விற்பனையானது.பூ வியாபாரிகள் சங்க தங்கராஜ் கூறியதாவது: இந்த வாரத்துடன் சீசன் முடிவதால், வரத்து குறைவாக

இருக்க வேண்டும். தொடர்ந்து பெய்த மழையால், ஒரே சமயத்தில் மல்லிகை பூக்கள் அனைத்தும் பூக்க துவங்கி விட்டன. இதனால், வரத்து அதிகரித்து விலை சரிந்துள்ளது, என்றார்.

## விவசாயிகளுக்கு தட்டுப்பாடு இன்றி உரம் வழங்க ஏற்பாடு

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழையால் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருவதை அடுத்து, 1.25 லட்சம் டன் உரத்தை, கூட்டுறவு சங்கங்கள், தனியார் உரக்கடைகள் வாங்கி குவித்துள்ளன. நடப்பாண்டு, தட்டுப்பாடு இன்றி உரம் கிடைக்கும் என, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில், தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு இல்லாத நிலையில், வங்காள விரிகுடா, அரபிக்கடலில் ஏற்பட்ட குறைந்தழுத்த தாழ்வு நிலை காரணமாக, வடகிழக்கு பருவமழை நான்கு நாட்களுக்கு முன்னதாகவே துவங்கி உள்ளது.

கடந்த ஒரு வாரமாக, தமிழகத்தில் பல மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையின் தாக்கம் அதிகரிப்பால், ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் நிரம்பி வருகின்றன. கிணறுகளில் நீர் மட்டம் அதிகரிக்க துவங்கி உள்ளதால், விவசாய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாய பணிகள் துவக்கப்பட்டுள்ள நிலையில், தங்கு தடையின்றி உரங்களை சப்ளை செய்யும் வகையில், வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனியார் உர விற்பனை நிலையங்களில், உரங்களை இருப்பு வைக்கும் பணியை துவக்கி உள்ளன.

ஆந்திரா, ஒடிசா, மத்திய பிரதேசத்தில் இருந்து மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும், அதிக அளவிலான உரம் வரவழைக்கப்பட்டுள்ளது. இப்கோவின் காம்ப்ளக்ஸ், யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் உரங்கள், தற்போது அதிக அளவில் கொண்டு வரப்படுகின்றன.

ரயில் மூலம் சப்ளை :இதில், பொட்டாஷ், டி.ஏ.பி., உரம் வெளிநாடுகளில் இருந்து கப்பல் மூலம் துாத்துக்குடி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து சரக்கு ரயில் மூலம் சப்ளை செய்யப்படுகிறது.

சேலம் ரயில்வே கூட்ஷெட்டுக்கு, கடந்த ஒரு வாரத்தில் மட்டும், 10 ஆயிரம் டன் உரம் வந்துள்ளது. இந்த உரம் சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு மாவட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியாருக்கும் சப்ளை செய்யப்பட்டு உள்ளது.

இதே போல், நாமக்கல், திருச்சி கூட்ஷெட்டுகளுக்கு தலா, 10 ஆயிரம் டன்னும், தஞ்சாவூர் கூட்ஷெட்டுக்கு, 20 ஆயிரம் டன் உட்பட, தென் மாவட்டங்களுக்கு, கோவை உள்ளிட்ட கொங்கு மண்டலத்துக்கு, நேற்று முன்தினம் வரை, வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து மொத்தம், 1.25 லட்சம் டன் உரம் கொண்டு வரப்பட்டு, குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தை, வேளாண்மை விவசாய கூட்டுறவு சங்கம் மட்டுமின்றி, தனியார் நிறுவனங்களும் வாங்கி இருப்பு வைத்து வருகின்றன.வேளாண்மை கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், நீர் நிலைகள் விரைவாக நிரம்பி வருகின்றன. இதனால், விவசாய பணிகள் துவக்கப்பட்டுஉள்ளன. வேளாண்மை விவசாய கூட்டுறவு சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் தேவையான உரங்களை இருப்பு வைக்கும் வகையில், உரங்களை வாங்கி குவித்து வருகின்றன.

1.25 லட்சம் டன் உரம் :தமிழகத்துக்கு, நேற்று முன்தினம் வரை, 1.25 லட்சம் டன் உரம் வரவழைக்கப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், 75 ஆயிரம் டன் உரத்திற்கு, தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உரம், நவம்பர் மாத கடைசி வாரத்தில் வந்து சேர்ந்து விடும்.

சாகுபடி துவங்கும் நிலையில், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், நடப்பாண்டில் தட்டுப்பாடு இன்றி, உரம் சப்ளை செய்யப்படும். வெளி மார்க்கெட்டில் உரம் தாராளமாக கிடைக்கும் வகையில், டீலர்கள் அதிக அளவில் உரத்தை இருப்பு வைத்து வருகின்றனர். நடப்பாண்டில் உரங்களுக்கு தட்டுப்பாடு என்பதோ, செயற்கையான விலை ஏற்றம் என்பதோ இருக்காது.இவ்வாறு, அவர் கூறினார்.

தினமணி

**பருவமழை: பழங்கள் விலை குறைவு**



பருவமழை காரணமாக சென்னை கோயம்பேடு சந்தையில் பழங்களின் விலை குறைந்தது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக தமிழகம் முழுவதும் தற்போது மழை பெய்து வருகிறது. இதனால், பழங்களின் வரத்து அதிகரித்து விலை குறைந்துள்ளது. சென்னை கோயம்பேடு சந்தையில் அனைத்து பழங்களும் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை குறைந்துள்ளது.

இதுகுறித்து கோயம்பேடு பழங்கள் மொத்த வியாபாரி ஜெயராமன் கூறியது:

கடந்த சில நாள்களாக சென்னையில் பலத்த மழை பெய்து வந்தது. இதனால் கோயம்பேடு சந்தையில் பொதுமக்களின் வருகை குறைந்து தீபாவளி உள்ளிட்ட சில நாள்களாக வியாபாரம் குறைந்திருந்தது. தற்போது மழை சற்று குறைந்துள்ளதால் பொதுமக்கள், வியாபாரிகளின் வருகை முன்பைவிட சற்று அதிகரித்துள்ளது. இருப்பினும் வர்த்தகம் முன்பு போல இல்லை.

தமிழகத்தில் பெய்து வரும் பருவமழை காரணமாக பல்வேறு பகுதிகளிலிருந்து கோயம்பேடு சந்தைக்கு வரும் பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்தாலும், விற்பனை சரிந்துள்ளதால் விலை குறைந்துள்ளது என்றார்.

**சென்னை கோயம்பேடு சந்தையில்**

ஞாயிற்றுக்கிழமை விற்பனை செய்யப்பட்ட பழங்களின் விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் பழைய விலை):

ஆப்பிள் 110 (130)

வாஷிங்டன் ஆப்பிள் 140 (160)

ஹிமாச்சல் ஆப்பிள் 100 (120)

சாத்துக்குடி 30 (45)

ஆரஞ்சு 35 (50)

திராட்சை 40 (60)

பப்பாளி 20 (30)

சப்போட்டா 30 (40)

கொய்யா 30 (45)

மாதுளை 110 (120)

அன்னாசி (ஒரு பழம்) 30 (50)

பூவம் வாழைப்பழம் (தார்) 250 (350)

**குறைந்தது தக்காளி, இஞ்சி விலை**

சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் தக்காளி, இஞ்சி ஆகியவற்றின் விலை குறைந்தது.

ஆசியாவிலேயே மிகப்பெரிய காய்கறிச் சந்தையான கோயம்பேடு காய்கறிச் சந்தைக்கு, நாள்தோறும் தமிழகத்திலிருந்தும், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்தும் லாரிகள் மூலம் காய்கறிகள் கொண்டுவரப்படுகின்றன.

கடந்த வாரம் கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்ட நாட்டுத் தக்காளியின் விலை ஞாயிற்றுக்கிழமை ரூ.5 குறைந்து, ரூ.15-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல, பெங்களூரு தக்காளி கிலோ ரூ.20-க்கும், இஞ்சி கிலோ ரூ.40-க்கும் விற்பனை செய்யப்பட்டன.

**இதுகுறித்து கோயம்பேடு காய்கறிச் சந்தை வியாபாரிகள் கூறியது:**

மழை காரணமாக கோயம்பேடு காய்கறிச் சந்தைக்கு தக்காளி, இஞ்சி உள்ளிட்ட காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது. இதில், தக்காளி வரத்து 50 லாரிகளிலிருந்து 60 லாரிகளாக அதிகரித்தது. இதன் காரணமாக நாட்டுத் தக்காளி, பெங்களூரு தக்காளி ஆகியவற்றின் விலை கிலோவுக்கு ரூ.5 வரை குறைந்தது.

கர்நாடகாவிலிருந்து வரும் இஞ்சியின் வரத்து தற்போது அதிகரித்துள்ளதால், கடந்த வாரம் கிலோ ரூ.60-க்கு விற்கப்பட்ட புதிய இஞ்சியின் விலை ரூ.40-ஆக குறைந்துள்ளது. அதே நேரத்தில், முள்ளங்கி விலை கிலோவுக்கு ரூ.10 அதிகரித்துள்ளது. சென்னையில் விட்டு விட்டு மழை பெய்து வருவதால், கோயம்பேட்டில் காய்கறி விற்பனை மந்தமாக உள்ளது என்று அவர்கள் கூறினர்.

சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் கிலோவுக்கு. (அடைப்புக்குள் பழைய விலை):

நாட்டுத் தக்காளி 15 (20), பெங்களூரு தக்காளி 20 (25), உருளைக்கிழங்கு 32 (30), முட்டைகோஸ் 12 (10), முள்ளங்கி 25 (15), இஞ்சி (புதியது) 40 (60), இஞ்சி (பழையது) 110 (120)

தினகரன்

**மேட்டூர் அணை நீர்மட்டம் 93 அடியானது**




**மேட்டூர்** : காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் பருவமழையால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 24ம் தேதி வினாடிக்கு 10,873 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் வினாடிக்கு 11,238 கனஅடியாக அதிகரித்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 10,509 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. டெல்டா பாசனத்திற்காக நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருகிறது. கடந்த 24ம் தேதி 91.91 அடியாக இருந்த அணை

யின் நீர்மட்டம் நேற்று முன்தினம் காலை 92.72 அடியாக அதிகரித்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 93.47 அடியாக உயர்ந்தது.

**தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு**




**சென்னை**: வட கிழக்கு பருவமழை மேலும் தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து தமிழகம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய மேற்கு வங்கக் கடலில் கடந்த வாரம் உருவான காற்று சுழற்சியால் தமிழகத்தில் நல்ல மழை பெய்து வருகிறது. அந்த காற்று சுழற்சி வலுப்பெற்று புயலாக மாறி அரபிக் கடல் பகுதியில் தற்போது மையம் கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக வளி மண்டல மேல் அடுக்கில், காற்று சுழற்சி நீடித்து வருகிறது. இதனால் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் இன்னும் மழை பெய்தபடி உள்ளது. இந்நிலையில், அரபிக் கடலில் மையம் கொண்டுள்ள புயல் காரணமாக தமிழகத்தில் கடலோரப் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி தொடர்ந்த நீடித்து வருகிறது. இதனால் ஆந்திரா, தமிழகம், கர்நாடகா மாநிலங்களில் கனமழை பெய்யும். தமிழகத்தில் உள்

மாவட்டங்களில் பல இடங்களில் கனமழை பெய்யும். குறிப்பாக கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும். வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் மிதமான மழை பெய்யும், சில இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது.

**வால்பாறையில் 100 மிமீ**

வால்பாறையில் 100 மிமீ மழை பெய்துள்ளது. நாமக்கல் 70 மிமீ, பெருந்துறை, சின்ன கல்லார், சேலம், தர்மபுரி 60 மிமீ, சேந்தமங்கலம், திருச்சி, உத்தமபாளையம் 50மிமீ, ஹரூர், பஞ்சப்பட்டி, பொள்ளாச்சி, திண்டுக்கல், வால்பாறை 40 மிமீ, ஊத்தங்கரை, சங்கராபுரம், உசிலம்பட்டி, தேன்கனிக்கோட்டை, புதுச்சேரி, மருங்காபுரி, அரவக்குறிச்சி, கடலூர், திருச்செங்கோடு, நாகர்கோயில், ஆத்தூர், கடவூர், வாழப்பாடி, ஈரோடு, மணல்மேல்குடி, கோவில்பட்டி, மயிலாடுதுறை, உடுமலைபேட்டை, செந்துறை, மயிலம், விருதுநகர், கோவில்பட்டி, மயிலாடி, வேடச்சந்தூர், செய்யார், சேடப்பட்டி 20 மிமீ, மாதவரம், செம்பரம்பாக்கம், பூண்டி 10 மிமீ மழை பெய்துள்ளது. சென்னை மற்றும் புறநகரில் லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

**குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் தேக்கம்**



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 43வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமை நடந்தது. இதில் மொத்தம் 17.52 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர். தரமான தேயிலை தூளை மட்டுமே வர்த்தகர்கள் கொள்முதல் செய்ததால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.5 வரை விலை சரிந்தது. அத்துடன் 36% தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை ஒரு கிலோ ரூ.42 முதல் ரூ.46 வரையிலும், உயர்வகை ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.105 வரையிலும் விலை போனது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ஒரு கிலோ ரூ.42 முதல் ரூ.50 வரையிலும், உயர் ரகம் ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.170 வரையிலும் விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.185, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.218ம் விலை கிடைத்தது. கடந்த சில வாரங்களாக இந்த ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் என்று ஏல மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வடமாநிலங்களில் நறுமணப்பூங்கா**



இட்டாநகர்: நறுமணப் பொருட்களை சந்தைபடுத்தி விற்பதற்காக, ‘நறுமணப் பொருட்கள் பூங்கா’ (ஸ்பைஸ் பார்க்) வடகிழக்கு மாநிலங்களில் அமைக்கப்படும் என்று இந்திய ‘நறுமணப் பொருட்கள் வாரியத்தின்’ தலைவர் ஜெயதிலாக் தெரிவித்துள்ளார். இட்டாநகரில் நேற்று நடந்த கருத்தரங்கம் ஒன்றில் ஜெயதிலாக் பேசுகை யில், ‘அருணாசல பிரதேசம் உள்ளிட்ட அனைத்து வடகிழக்கு மாநிலங்களில் இஞ்சி, மஞ்சள், மிளகாய் மற்றும் மிளகு உள்ளிட்ட உணவுக்கான நறுமணப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு இந்த மாநிலங்களில், ‘நறுமணப் பொருட்கள் பூங்கா’ அமைக்கப்படவுள்ளது. இந்த பூங்காவில் பொருட் களை பதப்படுத்துதல், சந்தைபடுத்தி விற்பது மற்றும் ஏற்றுமதி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும்’ என்றார்.

**வரத்து அதிகரிப்பால் வெற்றிலை விலை சரிவு**




தர்மபுரி: சந்தைக்கு வெற்றிலை வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அதன் விலை குறைந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி, வெள்ளோலை, முக்கல்நாயக்கன்பட்டி, பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 400 ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 2 முதல் 3 டன்

வரை வெற்றிலை அறுவடை செய்யப்படுகிறது. இதுகுறித்து வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகள் கூறுகையில், ‘தர்மபுரி மாவட்டத்தில் இருந்து பெங்களூரு, ஈரோடு, பவானி, அவினாசி உள்ளிட்ட இடங்களுக்கு வாரத்திற்கு 100 முதல் 300 மூட்டை வரை வெற்றிலை விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

ஒரு மூட்டையில் 120 கட்டு வரை வெற்றிலை இருக்கும். ஒரு கட்டுக்கு 100 வெற்றிலை இருக்கும். கடந்த மாதம் ஒரு கட்டு ரூ.35 முதல் 50 வரை விற்றது. தற்போது மழை பெய்து வருவதால் சந்தைக்கு வெற்றிலை வரத்து அதிகரித்து அதன் விலை சரிந்துள்ளது. வெள்ளை வெற்றிலை ஒரு கட்டு ரூ.25க்கும், கருப்பு வெற்றிலை (பீடா வெற்றிலை) ரூ.40க்கும் விற்கப்படுகிறது’ என்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**‘வைட்டமின் ஏ’ மருந்து வழங்கும் திட்டம்: பல குழந்தைகளை சென்றடையவில்லை**



சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் குடும்பநலத்துறை சார்பாக வைட்டமின் ஏ மருந்து வழங்கும் திட்டம் பல குழந்தைகளை

சென்றடையாமல் உள்ளது. இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தாததே இதற்கு காரணம் என்று பொதுமக்கள் புகார் கூறியுள்ளனர்.

இந்தியாவில் 20 சதவீத குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படு வதாக தேசிய ஊட்டச்சத்து நிறுவன ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் வைட்டமின் ஏ குறைபாட்டால் 5 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. இதனால் பார்வை இழப்பு, உடல் வளர்ச்சியில் பாதிப்பு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவு உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் குழந்தைகளுக்கு ஏற்படு கின்றன.

**16 கோடி குழந்தைகள்**

இதை தடுக்கும் விதமாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுக்கு 2 முறை குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ மருந்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 16 கோடி குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ மருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்காக ஒரு குழந்தைக்கு தலா ரூ.68 செலவிடப்படுகிறது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 5 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் 5 லட்சம் பேர் உள்ளனர். அவர்களுக்கு மாநகராட்சி சார்பில் கடந்த 6-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை வைட்டமின் ஏ மருந்து வழங்கப்பட்டது.

**செவிலியர்கள் அலட்சியம்**

மாநகராட்சி சுகாதார செவிலியர், அங்கன்வாடி பணியாளர் ஆகியோர் இணைந்து, வீடு வீடாகச் சென்று இம்மருந்தை வழங்க, மாநில சுகாதாரத்துறை உத்தரவிட்டிருந்தது. ஆனால் பல அங்கன்வாடிகளுக்கு இது குறித்த தகவலே தெரியவில்லை. கொடுங்கையூர் போன்ற பகுதிகளில் பல குழந்தைகளுக்கு 15-ம் தேதி நிலவரப்படி வைட்டமின் ஏ மருந்து வழங்கப்படவில்லை. பல வீடுகளுக்கு செவிலியர்கள் செல்லவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து சுகாதார செவிலியர்களிடம் கேட்டபோது, தாங்கள் செல்லும்போது,

வீட்டில் யாரும் இருந்திருக்க மாட்டார்கள் என்று பதிலளித்தனர். இத்திட்டம் குறித்து எந்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படாததால், அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசிக்கும் பெற்றோருக்கு இதுபற்றி எதுவும் தெரியவில்லை. இதனால் அரசு செவிலியர்களை அவர்கள் குடியிருப்புக்குள் அனுமதிக்கவே இல்லை.

**அரசு மட்டுமே வழங்குகிறது**

பெரியவர்களுக்கான வைட்டமின் மாத்திரைகள் பல கடைகளில் கிடைக்கின்றன. ஆனால் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கான மருந்தை அரசு மட்டுமே வழங்குகிறது. இதை அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் வசதி படைத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அது குறித்து மாநகராட்சி குடும்ப நலத்துறை விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று மருத்துவ அலுவலர் ஒருவர் தெரிவித்தார். இதுகுறித்து மாநகராட்சி குடும்ப நலத்துறை அலுவலர் ஹேமலதாவிடம் கேட்டபோது, மாநகராட்சி ஆணையரின் ஒப்புதல் பெற்று, இனி வரும் காலங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்திய பிறகு, வைட்டமின் ஏ மருந்து வழங்கும் பணி தொடங்கப்படும் என்றார்.

**முதல்முறையாக பால் விலை அதிகபட்ச உயர்வு**




| ஆவின் பால் வகை (லிட்டருக்கு) | அட்டை | | சில்லறை | |
|---|---|---|---|---|
| | தற்போதைய விலை | புதிய விலை | தற்போதைய விலை | புதிய விலை |
| சமன்படுத்தப்பட்ட பால் (நீல நிறம்) | 24 | 34 | 27 | 37 |
| நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை) | 29 | 39 | 31 | 41 |
| நிறை கொழுப்பு பால் (ஆரஞ்சு) | 33 | 43 | 35 | 45 |
| இரு முறை சமன்படுத்தப்பட்ட பால் (மெஜந்தா) | 23 | 33 | 24 | 34 |

பொதுமக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களில் முக்கியமானது பால். இது அனைத்து தரப்பினருக்கும் தடையில்லாமல் கிடைக்கும் நோக்கில் தமிழக அரசு கடந்த 1981 ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு 'ஆவின்' என்ற பெயரில் பால் நிறுவனத்தை உருவாக்கியது. இதன்மூலம், தமிழக மக்களுக்கு குறைந்த விலையில் தரமான பால் கிடைக்க அரசு வழிவகை செய்தது. பால் விற்பனை நல்ல லாபம் தரும் சந்தையாக இருப்பதால் தனியார் நிறுவனங்களும் 1990-களில் பால் பாக்கெட் விற்பனையில் இறங்கின.

திருமலா, டோட்லா, ஹெரிட் டேஜ், ஜெர்சி ஆகிய முன்னணி தனியார் நிறுவனங்களின் பால் விலை லிட்டருக்கு ரூ.40-க்கு மேல் இருக்கிறது. தனியார் பால் நிறுவனத்தின் சமன்படுத்தப்பட்ட பால் லிட்டர் ரூ.44, நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.40, முற்றிலும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் ரூ.36, கொழுப்பு செறிவூட்டப்பட்ட பால் ரூ.48-க்கு தற்போது விற்பனை ஆகிறது. சராசரியாக 3 மாதத்துக்கு ஒருமுறை பால் விலையை தனியார் நிறுவனங்கள் உயர்த்துகின்றன. தனியார் பால் பாக்கெட் விலை கடந்த 2 ஆண்டுகளில் 7 முறை உயர்த்தப்பட்டுள்ளது.

ஆவின் பால் கொள்முதல் விலை உயர்வு காரணமாக 2001-ம் ஆண்டு டிசம்பரில் சமன்படுத்தப்பட்ட ஆவின் பால் லிட்டர் ரூ.11.44-ல் இருந்து ரூ.1.06 உயர்ந்து ரூ.12.50 ஆனது. 2004-ல் கொள்முதல் விலை மட்டும் ரூ.1 உயர்த்தப்பட்டது. விற்பனை விலை உயர்த்தப்படவில்லை. 2007-ல் சமன்படுத்தப்பட்ட பால் ரூ.12.50-ல் இருந்து ரூ.1.50 உயர்ந்து ரூ.14 ஆனது. 2008-ல் லிட்டருக்கு ரூ.2 ம், 2011-ல் அதிரடியாக லிட்டருக்கு ரூ.6.25-ம் உயர்த்தப்பட்டு லிட்டர் ரூ.24 என்ற விலையை எட்டியது. ஒரேயடியாக லிட்டருக்கு ரூ.10 உயர்த்தியிருப்பது ஆவின் வரலாற்றில் இதுதான் முதல்முறை.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள விலை உயர்வு மூலம், ஆவின் நிறுவனத்தின் 4 வகையான பால் பாக்கெட்களும் லிட்டருக்கு ரூ.10 உயர்கிறது.

சமன்படுத்தப்பட்ட பால் (நீல நிறம்) சில்லறை விலை ரூ.27-ல் இருந்து ரூ.37 ஆகவும், அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ.24-ல் இருந்து ரூ.34

ஆகவும் உயர்கிறது. நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை நிறம்) சில்லறை விலை ரூ.31-ல் இருந்து ரூ.41 ஆகவும், அட்டைகளுக்கு ரூ.29-ல் இருந்து ரூ.39 ஆகவும் உயர்கிறது. நிறைகொழுப்பு பால் (ஆரஞ்சு) சில்லறை விலை ரூ.35-ல் இருந்து ரூ.45 ஆகவும், அட்டைகளுக்கு ரூ.33-ல் இருந்து ரூ.43 ஆகவும், இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் (இளம்சிவப்பு) சில்லறை விலை ரூ.24-ல் இருந்து ரூ.34 ஆகவும், அட்டைகளுக்கு ரூ.23-ல் இருந்து ரூ.33 ஆகவும் உயர்கிறது.

இந்த விலை உயர்வுக்கு முன்பு, ஆவினைவிட தனியார் பால் பாக்கெட் விலை சராசரியாக ரூ.13 அதிகம் இருந்தது. விலை உயர்வுக்குப் பிறகு, தனியார் பால் பாக்கெட் விலை ஆவினைவிட ரூ.3 அளவுக்கு அதிகம் உள்ளது.